# வடபகுதிக்கான சேவைகளை நிரந்தரமாக நிறுத்த செஞ்சிலுவை ஆலோசனை?

(நியூயோர்க்)
இலங்கையின் வடபகுதிக்கான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் சேவைகளை நிரந்தரமாக நிறுத்திவிடுவதற்கு, சுவிற்சர்லாந்தில ஜெனீவாவில் உள்ள சங்கத்தின் தலைமைச் செயலகம் ஆலோசித்து வருகிறது என 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' தெரிவித்தது.
(6ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5. 00

# ஈழநாடு
EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 23 இதழ் 122
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 06 - 6 - 1995

## நிவாரணப் பணிகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)
போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் வடபகுதிக்கான நிவாரணப் பணிகளையும், கப்பல் சேவையையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நேற்று முதல் இடைநிறுத்தியுள்ளதாக ரூபவாஹினி தெரிவித்தது.
[6-ம் பக்கம் பார்க்க]

## உணவுப் பொருள்களை அனுப்ப தடை இல்லை

(கொழும்பு]
வடபகுதிக்கு உணவுப் பொருள்களை அனுப்புவதற்கு அரசு தடை எதனையும் விதிக்கவில்லை.
கடந்த சனிக்கிழமை சீ டான்சர் கப்பல் காங்கேசன்துறை கடற்பகுதியில் கடற்கண்ணி வெடிக்கு இலக்கா
[6-ம் பக்கம் பார்க்க]

## இனவாதக் குண்டர் படை

# எல்பிட்டியவில் தமிழர்மீது தாக்கு

# 8 வயதுச் சிறுமி வெட்டிக்கொலை!

## - நால்வர் படுகாயம்; வீடுகள் தீக்கிரை!! -

(கொழும்பு)
காலி மாவட்டத்திலுள்ள எல்பிட்டிய என்னுமிடத்தில் நேற்றுக்காலை குண்டர் படையினர் தமிழர் மீது தாக்குதல் நடாத்தியுள்ளனர். இத்தாககுதலில் எட்டு வயதுடைய சிறுமி ஒருவர் மிகக்குரூரமாக வெட்டியும் குத்தியும் படுகொலை செய்யப்பட்டார், நால்வர் படுகாயமடைந்தனர். ஏழு விடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

நேற்றுக் காலை குண்டர்கள் எல்பிட்டிய பகுதியைச் சேர்ந்த தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் வீடுகளைச் சூழ்ந்துகொண்டு, அங்கிருந்த அப்பாவித் தமிழர்கள் மீது தாக்குதல்களை நடாத்தினர். இதில் சிறுமி ஒருவர் கொல்லப்பட்டார். நால்வர் காயம் அடைந்தனர். ஏழு வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன என
(6ம் பக்கம் பார்க்க)

## 400க்கும் அதிக தமிழர் கோயில்களில் தஞ்சம்

(கொழும்பு)
காலியில் ஏற்பட்ட வன்செயல்களை அடுத்து இந்துக் கோவில்களில் தமிழர்கள் தஞ்சமடைந்து இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றும் நடந்த வன்செயலினால் அங்கு வாழ் தமிழரிடையே பயப்பீதி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அங்குள்ள கோவில்களில தற்போது தஞ்சமடைந்துள்ள 400 க்கு மேற்பட்ட தமிழர்களையும் தத்தம் இடங்களுக்கு திரும்புமாறும் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் பொலிசார் தெரிவித்து வருகின்றனர். கே இ

## கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நேற்றிரவு குண்டுவெடிப்பு

(கொழும்பு)
கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலயத்தில் நேற்று இரவு 9-00 மணியளவில் குண்டு ஒன்று வெடித்தது, விமானநிலயத்தில்கார்களை நிறுத்திவைக்கும் இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காருக்குள் வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்றே வெடித்ததாக விமானநிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இ

## புலிகளின் தாக்குதலில்

# ஊர்காவற்றுறையில் இராணுவ சிப்பாய் பலி

(யாழ்ப்பாணம்)
ஊர்காவற்றுறையில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். நேற்று இச்சம்பவம் இடம்பெற்றது.

ஊர்காவற்றுறையின் வடகிழக்குப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகளினால் நடாத்தப்பட்ட தாக்குதலின்போது அந்தச் சிப்பாய் பலியானார் எனத் தெரிவிக்கப்பட்டது. கே சி

# தந்திரிமலை இராணுவமுகாம் தகர்ப்பில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதம்

[யாழ்ப்பாணம்]
வவுனியாவில் செட்டிக்குளத்திற்கு அண்மையிலுள்ள தந்திரிமலை இராணுவ முகாமுக்கு அருகேயுள்ள மினிமுகாம் விடுதலைப் புலிகளால் கடந்த ஞாயிறு அதிகாலை தகர்க்கப்பட்டபோது புலிகளால் பல இராணுவ தளபாடங்கள் கைப்பற்றப்பட்டன.

★ ரி56 2ரக துப்பாக்கி - 1
★ ரி56 1ரக துப்பாக்கி - 1
★ நடுத்தர ரவைகள் -1015

(6ம் பக்கம் பார்க்க)

## மாணவர் எழுச்சி நாள்: சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]
தமிழீழ மாணவர் எழுச்சி நாள் இன்று செவ்வாய்க்கிழமை மிகவும் உணர்வு பூர்வமாக கொண்டாடப்படவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு தமிழீழ மாணவர்களுடன் இணைந்து இவ்எழுச்சி நாளை இன்றுவெகு சிறப்பாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது

இந்த எழுச்சி நாள் கோட்ட மட்டங்களில் முடிவெடுக்கப்பட்டு இன்று கொண்டாடப்படுவதென தீர்மானிக்கப்பட்டது.

தமிழீழ மாணவர் எழுச்சி
(6ம பக்கம் பார்க்க)

## ★ இன்று மாணவர் எழுச்சி நாள்:

# மாணவர் பலம் மகத்துவமானது புதுமைகளைப் படைக்கக்கூடியது

## வி. பு. மாணவர் அமைப்பு அறிக்கை

[யாழ்ப்பாணம்]
மாணவர் பலம் மகத்துவமானது எண்ணற்ற புதுமைகளைப்படைக்கக்கூடியது இவற்றைக் கருத்தி கொண்டே யூன் 06ம் திகதியை தமிழீழ மாணவர் எழுச்சி நாளாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பிரகடனப்படுத்தி உள்ளது.

இந்த எழுச்சி நாளில் மாணவர் தம்மைத் தாம் மீண்டும் ஒருமுறை மதிப்பீடு செய்ய வேண்டும். தம் தேசத்தை,
(6-ம் பக்கம் பார்க்க)

## நோயாளர் கவனத்திற்கு

[யாழ்ப்பாணம்]
கொழும்பு செல்லும் நோயாளர்களுக்கான கப்பற்சேவை மறு அறிவித்தல் வரை நடைபெறமாட்டாதென்றும் வெள்ளிக்கிழமைகளில் நோயாளர்களைப் பதிவு செய்தலும் இடை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.
இ 170

## ஆலயம் மீதான தாக்குதலை நிறுத்துமாறு கோரிக்கை

(நெல்லியடி)

தொண்டமானாறு சந்நிதி ஆலயப் பகுதியை நோக்கி பலாலி இராணுவத்தினரால் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஷெல் தாக்குதலை நிறுத்த நடவடிக்கையெடுக்குமாறு மேற்படி ஆலய ஆச்சிரம செயலாளர் மோகனதாஸ் கேட்டுள்ளார்.

இராணுவத்தினரின் ஷெல் தாக்குதல்கள் ஆலய மடங்கள், பூசை செய்யும் குருக்களின் இல்லம், ஆலய பகுதிகள் என்பவற்றைக் குறியாகக்கொண்டு மேற்கொள்ளப்படுவதாகவும் ஆச்சிரம செயலரினால் இது குறித்து அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் ஆ சிவசுவாமிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள இம் மகஜரின் பிரதிகள் யாழ். அரச அதிபர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், நல்லை ஆதீனம் ஆகியவற்றுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. 160-கி

## இராசி பலன்

06-06-1995

செவ்வாய்க்கிழமை

[தமிழுக்கு வைகாசி 23]

அட்டமி முன்னிரவு 11-09 வரை; பூரம் முன்னிரவு 9-17 வரை இராகுகாலம் பகல் 2-52 முதல் 4-20 வரை; சுப வேளை காலை 10-22 முதல் 11-52 வரை.

மேஷம்: குடும்ப வேற்றுமை, பணமுடை, அலைச்சல்.

இடபம்: மனச் சஞ்சலம், தொழில் பகை. தாயார் கவலை.

மிதுனம்: குடும்பசுகம், கிருகப்பிரவேசம், காரியசித்தி.

கடகம்: வசதிக் குறைவு. நண்பர் விரோதம், முயற்சி தாமதம்.

சிங்கம்: தொழில் லாபம், மனமகிழ்ச்சி. பயணம்.

கன்னி: வாக்குப்பகை, அனுவசியகுழப்பம். அகால உணவு.

துலாம்: அதிகாரிகள் பாராட்டு, சுபகாரியம், பெண் உதவி.

விருச்சிகம்: சயனசுகம்; விரும்பியது அமைதல் பாராட்டு.

தனுசு: பழைய நினைவுகள், தொழில் கஷ்டம், கண்டனம்.

மகரம்: முட்டி மோதுதல், கடன் சுமை, வெறுப்பு.

கும்பம்: கல்வியில் சிறப்பு, மாமனார் அறிவுரை, தான தர்மம்

மீனம்: சலைஞானம் தாய் வழி நினைவு, சபலபுத்தி.

— ஜோஸ்யர்

## ம. எண்ணை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ''மாகோ'' கப்பலில் எடுத்துவரப்பட்ட மண்ணெண்ணையை சங்க கிளைகளினூடாக விநியோகித்து வருகின்றது.

பங்கீட்டு அட்டைக்கு லீற்றர் 25 ரூபா விலையில் இரண்டு லீற்றர் மண்ணெண்ணை வழங்கப்பட்டு வருகின்றன. எதிர்வரும் 10 ம் திகதிக்கு முன்னதாக மண்ணெண்ணையைப் பெற்றுக்கொள்ளுமாறு மக்களை சங்கம் கேட்டுள்ளது. 170-சி

கோண்டாவில் தில்லையம்பதியில்

(இன்று) நான்காம் திருவிழா



ராகம்; கல்யாணி

ஆலரசு மரத்தின் அருள்மிகு பொந்தினூடே

ஆனந்தக் கலசம் காட்டும் அம்பிகையே சிவகாமி

பாலாபிஷேகம் செய்தோம்

பங்குனித் திருநாளில்

பௌர்ணமித் திருவிளக்கின் சோதியான கல்யாணி

தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே

தொல்லைகள் தீர்ப்பாயம்மா தேவி

ஆக்கம்;

கவிமாமணி ந. வீரமணிஐயர்

இரவு 7-30 மணி:

**கண பாலர் கதை**

என்னும் பொருள் பற்றி சிவநெறித் தொண்டன் செ. சத்தியமூர்த்தி (ஆசிரியர்)

சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

எ-4971

யாழ். பல்கலைக்கழகத்தில்

## எரிபொருள் தட்டுப்பாடு 'பிக்கப்' வாகனம் முடக்கம்

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் அரசாங்கம் யாழ். பலகலைக்கழகத்திற்கு அன்பளிப்பு செய்த பிக்கப் வாகனம் எரிபொருள் இல்லாமையால் முடங்கிக் கிடக்கின்றது.

பல்கலைக் கழகத்தில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் இவ்வாகனத்தின் சேவை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனைவிட பல்கலைக்கழகத்தில் இருக்கும் பெரிய வாகனத்தின் சேவையும் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் எரிபொருள் தட்டுப்பாட்டால பல்கலைக்கழகத்தின் மின்சார விநியோகமும் தடைப்பட்டுள்ளது. -170

## யாழ். றோட்டறிக் கழகம் 7 விருது பெற்று சாதனை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கையிலுள்ள 42 றோட்டறிக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்தத் தேர்வில் யாழ். றோட்டறிக் கழகம் ஏழு விருதுகளைப் பெற்று சாதனை படைத்திருக்கிறது. இலங்கையில் சிறந்த றோட்டறிக் கழகமாகவும் அது தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

யாழ். றோட்டறிக் கழகம் ஏழு விருதுகளைப் பெற்றது பற்றிய அறிவிப்பு அண்மையில் கொழும்பில் நடைபெற்ற றோட்டறிக் கழக மாநாட்டில் வைத்து அறிவிக்கப்பட்டது.

யாழ். றோட்டறிக் கழகத்துக்கு கிடைத்துள்ள விருதுகள் வருமாறு:

இலங்கையில் சிறந்த கழகம். இலங்கையில் சிறந்த கழகத் தலைவர், யாழ். றோட்டறிக்கழகத் தலைவர் றோட்டேறியன் இ. சரவணபவன், இளைஞர் சேவை சிறப்புச் சாதனை, கழக சேவை சிறப்புச் சாதனை, இலங்கை [றோட்டறி மாவட்ட] ரீதியான குறிப்பீட்டு திட்டத்தில் சிறப்பாகப் பங்குகொண்டதற்கான விருது, சர்வதேச றோட்டறித் தலைவரின் குறிப்பீட்டு திட்டத்தில் சிறப்பாகப் பங்கு கொண்டதற்கான விருது என்பனவே வழங்கப்பட்டுள்ளன. சி

புலிகளின் குரல்

நிகழ்ச்சி நிரல்

1995-06-06

செவ்வாய் இரவு

08-02 ஊர்சுற்றும் ஒலிவாங்கி

08-10 தமிழீழ மாணவர் எழுச்சி நாளையொட்டி சிறப்பு நிகழ்ச்சி; இயல்வாணன் எழுதிய- ''மோதி மிதித்து விடுங்கள்''

08-30 செய்திகள்

08-40 கருத்துக்களம் இ. இராஜேஸ்வரன் எழுதிய 'சொல்லும் செயலும்'

08-50 மலரும் மொட்டுக்கள்

1995-06-07

புதன் காலை

07-02 மாவீர வணக்கம்

07-15 நீங்கள் கேட்டவை

07-30 செய்திகள்

07-35 பத்திரிகைச் செய்திகள்

7-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

தமிழீழ வானொலி

நிகழ்ச்சி நிரல்

1995-06-06

செவ்வாய் மாலை

05-00 சிந்தனைச் சிதறல்

05-02 எழுச்சிகீதம

05-10 புதியவை

05-15 தமிழிசை

05-30 வானொலி மதியூகம்

06-00 சிந்தனைக்கு சிலவிடைகள்

06-15 விளையாட்டுச்செய்திகள்

06 20 என் தெரிவு

06 30 நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

## டாக்டர்கள் பற்றுக்குறை

(நெல்லியடி)

வல்வெட்டித்துறைமாவட்ட வைத்தியசாலையில் நிரந்தரமான பற்சிகிச்சை நிபுணர் இல்லை அத்துடன் டாக்டர்கள், சிற்றூழியர்கள், தாதிகள் பற்றுக்குறைவும் நீண்டகாலமாக இருந்து வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. -160

## மலத்தியோன் விசிறல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சுகாதார பகுதியினர் மலத்தியோன் விசிறும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

சுகாதார பகுதிக்கு அண்மையில் குறைந்தளவு மலத்தியோன் வந்து சேர்ந்ததினால் மலத்தியோன் விசிறுவது மட்டுப்படுத்தியிருப்பதாக சுகாதார பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். -170

## தேங்காய் விலை வீழ்ச்சி

(கொழும்புத்துறை)

யாழ். குடாநாட்டில் தற்போது தேங்காய் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

தற்போது சந்தை, கடைகளில் ஒரு தேங்காய் ரூபா பத்து தொடக்கம் பன்னிரண்டு ரூபா வரை விற்பனையாகி வருகிறது. -154

## வைத்தியநிலையம் இடமாற்றம்

(கொழும்புத்துறை)

மானிப்பாயில் இயங்கி வரும் தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலை இதுவரை காலமும் கந்தரோடையில் நடத்திவந்த வைத்தியசிகிச்சைநிலையம் தற்போது மல்லாகம் சந்திக்கு அண்மையில் இடமாற்றப்பட்டு இயங்கி வருகிறது. 154

## சுய தொழில் வாய்ப்பு கடன் திட்டம்

[யாழ்ப்பாணம்)

விதவைகளுக்கான சுய தொழில் வாய்ப்புக்கடன் திட்டம் ஒன்றினை றெட்பாணா தொண்டர் நிறுவனம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

நல்லூர், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் குடும்பத் தலைவரை இழந்து வாழும் விதவைப் பெண்களின் நலன் கருதியே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என றெட்பாணா பொறுப்பாளர் பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

இத்திட்டத்தின்கீழ் இவர்களுக்கு வீட்டுத்தோட்டச் செய்கைக்கு என நல்ல இன பழமரக் கன்றுகள், விதைகள் போன்றவை வழங்கப்பட்டு வருவதுடன் அனாதரவான சிறுவர்களைப் பாமரித்தல், இவர்களுக்கான சேமிப்பை ஊக்குவித்தல், தலைமைத்துவ மற்றும் தொடர்புகள் பற்றிய பயிற்சிகள் வழங்குதல் போன்ற செயல் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார், 162கி


# தமிழீழ மாணவர்

# எழுச்சி நாள் யூன் - 6

நூலகத்தை எரித்த பரம்பரையே

எங்கள் அறிவுக்குழந்தைகளின் ஆக்கத்துக்கு வழி விடு

மாணவர்களே எழுந்திடுவீர்கள் புதுயுகம் படைப்பீர்

**கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்**

(எ-4978)

# புலிகளுக்கு விமான எதிர்ப்பு ஏவுகணைகள் பாகிஸ்தானிலிருந்து வந்தனவா?

**மணிவாக்கு**

அடக்கத்தை செல்வமாகக் கருதிக் காக்க வேண்டும். அதுபோல உயிர்க்கு நன்மை தருவது வேறில்லை;

— வள்ளுவர்.

## நமது நோக்கு

### எல்லைக் கிராம பாதுகாப்பு

சிங்கள எல்லைப்புற கிராமங்களின் பாதுகாப்புபற்றி ஆலோசனை கூறுவதற்கு பத்துப் பேர் கொண்ட குழு ஒன்று இலங்கை வந்துள்ளது. எந்த எந்த நாட்டை அவர்கள் சேர்ந்தவர்கள் என்ற விபரம் பாதுகாப்பு காரணங்களுக்காக அரசு வெளியிட மறுத்துள்ளது.

சிங்கள எல்லைப்புற கிராமங்கள் என்றால் எவை? சிறிலங்காவின் முதல் பிரதம மந்திரியாக இருந்த டி. எஸ். சேனநாயக்கா சிங்கள உயர் குழாத்தினரிடம் இருந்து அரசியல் ஆதிக்கம் கைநழுவிவிடக் கூடாது என்ற பிற்போக்கு நோக்குடன் ஆங்கிலேயர்கள் சிறிலங்கா மக்களைச் சுரண்டி உருவாக்கிய கைத்தொழில்களைக் கூட அபிவிருத்தி செய்யாமல் சிறிலங்காவை விவசாய மயப்படுத்தினர்.

அவரது விவசாய மயப்படுத்தல் கொள்கை எவ்விதம் நடத்தப்பட்டது? காலம்காலமாக தமிழ் மக்கள் வாழ்ந்த பாரம்பரிய நிலங்களிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்டு சிங்களக் குண்டர்களும், ஐ. ஆர், சிக்களும் அரச உதவியுடன் குடியேற்றப்பட்டார்கள். இக் குடியேற்றவாதிகளுக்கு அரச மானியங்கள் வழங்கப்பட்டன. பௌத்த மகா சங்கமும் ஊக்கமும், உற்சாகமும் அளித்தது. இவைகள் தான் இப்போது 'சிங்கள எல்லைப்புற கிராமங்கள்'' என்று அழைக்கப்படுகின்றன. இவைகளின் பாதுகாப்புக்கு ஆலோசனை வழங்குவதற்காகத் தான் வெளிநாட்டு ஆலோசனைக் குழு வந்துள்ளது. இக் குழுவில் பாலஸ்தீனியர்களின் பரம்பரை நிலங்களை ஆக்கிரமித்து தற்போது அவற்றை தக்க வைக்க முடியாது பாலஸ்தீனியர் வசமே திருப்பிக் கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்ட இஸ்ரேலின் பிரதிநிதியும் கட்டாயம் இருப்பார் என்பதில் ஒரு ஐயமுமில்லை.

எது எவ்வாறாயினும் ஆக்கிரமிப்பாளர்கள் தாங்கள் ஆக்கிரமித்த நிலங்களை நெடுங்காலத்துக்குதக்கவைத்திருந்தார்கள் என்பதற்கு வரலாற்றில் சான்றுகள் இல்லை

---

[புதுடில்லி]

விடுதலைப்புலிகளால் யாழ்ப்பாணப் பகுதியில் வைத்து இரு அவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்படுவதற்கு பாவிக்கப்பட்டதாக கருதப்படும் 'ஸ்ரிங்கர்' ரக ஏவுகணைகள் அமெரிக்காவினால் பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களின் ஒரு பகுதியென்று விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிப்பதாக 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்: சோவியத் துருப்புக்களுக்கெதிரான ஆப்கான் போராளிகளின் யுத்தத்தின் போதும் இத்தகைய ஆயுதங்களை வழங்கும் நாடாக பாகிஸ்தான் விளங்கியது.

பாகிஸ்தான் உளவுஸ்தாபனமான ஐ. எஸ். ஐயினால் விநியோகிக்கப்பட்ட தோளில் வைத்து இயக்கக்கூடிய 500 ஸ்ரிங்கர் ஏவுகணைகளில் பெரும்பாலானவற்றின் கணக்கு விபரம் இன்னமும் சரிவர பேணப்படவில்லை. உலகின் வேறு பகுதிகளில் இத்தகைய ஆயுதங்களை சட்ட விரோதமாக கொள்வனவு செய்வதென்பது மிகவும் கடினமான விடயமாகும்.

எஸ் ஏ-7, ஸ்ரிங்கர், றெட் ஐ ஆகிய ஏவுகணைகள் ஆப்கானிஸ்தானுக்குரியவை. இவற்றை தென்கிழக்காசியாவில் அல்லது மேற்காசியாவின் கறுப்புச்சந்தைகளில் பெறுவதென்பது இலகுவான காரியமல்ல. ஆனால் முக்கிய ஐ. எஸ். ஐ. பகுதிகளான கந்தகார், ஜலலாபாத் அகிய பாகிஸ்தானின் பகுதிகளில் இது சாத்தியமாக உள்ளது.

ஐ எஸ் ஐ.யின் உதவியுடன் கூடிய விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள், இலங்கையின் உள்விவகாரத்தில் இந்தியாவை மீண்டும் தலையிட வைப்பது என்ற பாகிஸ்தானின் முக்கிய குறிக்கோளுக்கு சாதகமாக அமையும்.

ஏற்கனவே ஜம்முவிலும், காஷ்மீரிலும் தீவிர பணியில் ஈடுபட்டுள்ள இந்தியப்படையில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவது தான் இதன் அடிப்படை நோக்கமாகும். இந்தியாவின் பாதுகாப்பு எல்லைகளை விஸ்தரிப்பது முக்கியமாகிறது.

இந்தியாவில் ஏற்பட்டுள்ள உள்நாட்டு கலவரங்களை அடக்கும் இந்திய பாதுகாப்புபடையினரின் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடுவதும் பாகிஸ்தானின் ஒரு முயற்சியாகும். இதுவரையில் இந்தியப்படைகளை வடக்கு, வடகிழக்கிற்கு திருப்புவதில் பாகிஸ்தான் வெற்றிகண்டுள்ளது. இந்தியாவின் எல்லைகளில் குறிப்பாக பங்களாதேஷ் நேபாள எல்லைகளில் நாச வேலைகளில் ஈடுபட இப்போது பாகிஸ்தான் முயற்சி செய்கிறது.

அண்டைய நாடுகளில் அரசியல் ஸ்திரத்தன்மையை குலைப்பதன் மூலம் 'சார்க்' நாடுகள் மத்தியில் இந்தியாவின் முக்கியத்துவத்தை குறைக்கவும் பாகிஸ்தான் முயற்சி செய்யக்கூடும் எனவும் தெரிவித்துள்ளது. -சி

# தப்பிஓடிய 26,000 படையினருக்கும் மன்னிப்பு; மீண்டும் வேலைவாய்ப்பு

[கொழும்பு]

இராணுவத்திலிருந்து தப்பியோடிய 26,000 பேருக்கும் மன்னிப்பு வழங்கி மீண்டும் அவர்களை வேலைக்கு சேர்க்க அரசு முடிவுசெய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் சரணடையும் பட்சத்தில் விசாரணைகள்மாத்திரம் நடாத்தப்படுமெனவும் தண்டனை எதுவும் வழங்கப்படாது அனைவரும் மன்னிக்கப்படுவதுடன் இவர்களுக்கு மீண்டும் அதேவேலை வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யுத்த முனையில் படையினருக்கு நிலவும் பெரும் பற்றுக்குறை காரணமாகவே அரசு இந்த முடிவுக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது, அண்மையில் படையினருக்கு ஆட்களை திரட்ட பல சலுகைகள் வழங்கப்பட்ட போதும் எதிர்பார்த்த அளவு ஆட்களை சேர்க்க முடியவில்லையாம்,

படைகளிலிருந்து தப்பி ஓடிய இவர்கள் தற்போது ஜே. வி. பி: யில் இணைந்து வருகின்றனர். வேறுபலர் சிறு சிறு குழுக்களாக சேர்ந்து கொள்ளை, கொலைகள் போன்ற சட்டவிரோதசெயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதால் அரசுக்கு பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாலேயே இவர்களை மன்னித்து மீண்டும் படைகளில் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் எனினும் இது எவ்வளவு தூரம் வெற்றியளிக்குமென்பது சிக்கலாகவே உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சி

# ரத்வத்தையின் வீட்டருகே நடமாடிய தமிழ் இளைஞர் கண்டியில் கைது

[கொழும்பு]

பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தையின் கண்டி இல்லத்திற்கு அருகில் சந்தேகத்திற்கிடமாக நடமாடியதாக தமிழ் இளைஞர் ஒருவரை கண்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பழைய பித்தளைப் பொருட்களை சேகரிப்பதற்காக வந்ததாக இந்த தமிழ் இளைஞர் அமைச்சர் ரதவத்தையன் புதல்வர்களிடம் தெரிவித்திருந்தாராம். அமைச்சரின் இரு புதல்வரும் கண்டியிலேயே வசித்து வருகிறார்கள்.

இவ் இல்லத்திற்கு அருகில் சந்தேகத்திற்கு இடமான முறையில் தமிழ் இளைஞர்கள் நடமாடி வருவதாகவும் தமிழில் 'குண்டுக்கு தப்ப முடியாது' என்ற வாசகம் எழுதப்பட்ட காகிதத் துண்டு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதையடுத்து அமைச்சர் ரத்வத்தையின் கண்டிவீட்டை சுற்றி பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்வபபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மேலும் கொழும்பிலும் அமைச்சர் ரத்வதவையின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டதுடன் அவரது நடமாட்டமும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### 24வது சுற்று மண்ணெண்ணை

[ஆனைப்பந்தி]

தீவக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பாவனையாளர்களுக்குரிய 24வது சுற்று மண்ணெண்ணை தற்போது அந்தந்த சங்கங்களின் எண்ணெய் விநியோகக் கிளைகளில் வழங்கப்படுகின்றது. -101

### சுய உதவிக் கடன்

(கொழும்புத் துறை)

தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பளைப் பிரிவினர் இவ் வருடத்தில் சுய உதவிக் கடனாக ஒரு லட்சத்து அறுபத்துமூன்று ஆயிரம் ரூபாவை 25 பயனாளிகளுக்கு அண்மையில் வழங்கியுள்ளனர். -154

## பலதும் பத்தும்

### கடல் மாசுபடல்...!

மேற்கு நாடுகளில்... தொழிற்சாலைக் கழிவுகள் எல்லாம் கடலுக்கு அனுப்பப்படுகின்றன. கடல் தானே... எதனையும் ஏற்றுத் தாங்கிக்கொள்ளும் எனத் தான் நினைத்துக்கொண்டிருந்தார்கள்,

ஆனால்... இந்தக் கழிவுகளிலிருந்த இரசாயன நச்சுப் பொருள்கள் மீன் உணவில் கலந்துவிடுவதால் மீன் உண்பவர்களே நஞ்சை உட்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார்கள்.

பால்டிக் கடலில் நடத்தப்பட்ட ஆய்வில்... மீனின் ஒரு கிலோவில் 800 மி. கிராம் பாதரசம் (Mercury) சேர்ந்துவிடுகிறது. இதனால்... 'கொட்' வகை மீன் உண்பவர்களது மீனில் ஒரு வெப்பமானியில் இருக்கும் அளவு பாதரசம் சேர்ந்துவிடுமாம்!

— மயூரன்

# தமிழர்கள் என்று தெரிந்தால் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(கண்டி)

தென்பகுதியில் தற்போது பஸ்வண்டிகளில் தமிழ் பிரயாணிகள் கதைத்துக்கொண்டு வந்தாலோ அல்லது தமிழர் என்று தெரிந்தாலோ பஸ் ஓட்டுநரும் நடத்துனரும் சந்தேகப்பட்டு அருகாமையிலுள்ள பொலிஸ் நிலையத்தில் தமிழ் பயணிகளை ஒப்படைத்து விடுகிறார்களாம்

மேற்படி சம்பவங்கள் அண்மையில் களுத்துறை, பதுறலியா போன்ற பகுதிகளில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு தெற்கில் வேறுபல பகுதிகளிலும் இது போன்ற சம்பவங்கள் நடைபெற்றுள்ளது

இதையடுத்து தெற்கில் பஸ், ரயில்களில் பயணம் செய்யும் தமிழர்கள் விபூதி, சந்தனம் பூசுவதையும் பெண்

[5ம் பக்கம் பார்க்க]

# வடக்கே செல்ல விமானிகள் மறுப்பு புதியவர்கள் சேவைக்கு அழைப்பு

(கொழும்பு)

வடக்கே விமானங்களை ஓட்டிச் செல்ல விமானிகள் தொடர்ந்தும் மறுத்துவருவதால் விமானப் படையினர் உடனடியாக புதிய விமானிகளை சேர்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்

புலிகளின் ஏவுகணைத்தாக்குதலை தொடர்ந்து விமானங்களை வடபகுதிக்கு கொண்டுசெல்ல சகல விமானிகளும் மறுத்துவிட்டதுடன் தொடர்ந்தும் மறுத்து வருகின்றனர். பலர் லீவில் சென்றுள்ளனர். இதையடுத்து அரசு விமானிகள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கும் தடை விதித்துள்ளது.

இந்நிலையில் விமானப்படைக்கு தேவையான விமானிகள் தொண்டர் சேவை அடிப்படையில் பயிற்சி வழங்கப்பட்டு அவர்கள் சேவையில் சேர்த்துக் கொள்ளப் படவுள்ளதாக விமானப்படைத்தளபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடபகுதி போன்றே கிழக்கிலும் விமான சேவை முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது அங்கும் விமானங்களை கொண்டு செல்வதற்கு விமானிகள்மறுத்துவிட்டனர். இதனால் கிழக்கில் நடைபெறும் மோதல்களில்படையினர் செய்வதறியாது திகைப்படைவதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (சி)

---

நீர் நிறைக்க குளம் தோண்டு
பார் நிறையும் பசுமையினால்

# இன்னல்கள், இழப்புகளுக்கு மத்தியிலும் கல்விப் பயிரை வளர்க்கும் தமிழீழ மாணவர்கள்

**ஜூன்** 6 தமிழீழ மாணவர் எழுச்சி நாளாக கடந்த வருடம் முதல் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

தமது உரிமைக்காகவும், சுதந்திரத்துக்காகவும் மக்கள் போராடும் மேதினம், மகளிர் தினம் போன்ற வரிசையில் மாணவர் எழுச்சி தினமும் இடம்பிடித்துக் கொண்டது. ஜூன் 6 தமிழீழ மாணவர் எழுச்சி நாளாகப் பிரகடனப் படுத்தியதன் காரணம் என்ன?

இந்தவகையில் நோக்கும் போது தமிழ் மாணவர்களின் கல்வியும் அரசியலும் பின்னிப் பிணைந்திருப்பதை இனம் காணலாம். இற்றைக்கு நான்கு தசாப்த காலத்துக்கு முன்பே சிங்கள அரசு தமிழ்ப் புத்திஜீவிகளைப் பாதிக்கும் வகையில் செயற்பட்டது. அதுதான் பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் 1956ல் அமுலுக்கு வந்த 'தனிச் சிங்கள மொழிச் சட்டம்.' இச்சட்டம் நாடாளுமன்றத்தில் பிரகடனப்படுத்திய நாள் ஜூன் 6. தமிழினத்தின் கற்றவர்களுக்கு எதிராகப் போடப்பட்ட முதல் குண்டு இதுதான்.

இச்சட்டத்துக்கு பலியானவர்கள் பலர். அரசாங்க உத்தியோகம் பெறவேண்டுமாயின் அவர்கள் கட்டாயமாக சிங்களபாடத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும். பதவி உயர்வு கிடைக்க வேண்டுமாயினும் சிங்கள பாடத்தில் சித்தி அடையவேண்டும் போன்ற பலநிபந்தனைகள் விதிக்கப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக குறிப்பிட்ட காலத்தில் சிங்கள பாடத்தில் சித்தியெய்தாதவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். இப்படி உயர்பதவிகளிலிருந்து பல தமிழர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டனர். அவ்வெற்றிடங்களை சிங்களவர்கள் நிரப்பிக் கொண்டனர். இது தமிழர் மத்தியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

அடுத்ததாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தமது ஆட்சியில் அமுல்படுத்திய 'தரப்படுத்தலாகும். எமது போராட்டம் ஆரம்பிப்பதற்கு வித்திட்டதே இத்தரப்படுத்தல்தான. திறமைக்கு மதிப்பளிக்காது மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதிமறுக்கப்பட்டபோது அதன் விளைவு ஆயுதம் ஏந்தும் போராட்டமாக பரிணமித்தது அன்றிலிருந்து இன்று வரை சிங்கள அரசு தமிழர்களுக்கு எதிராகப் பல அழுத்தங்களை தொடுகின்றது. அவற்றுள் மாணவர்களுக்கு எதிராகத் தொடுக்கும்அழுத்தங்கள் பல.

இரண்டாம் கட்டப்போர் நடைபெறும் காலத்தில் அமுலுக்கு வந்த பொருளாதாரத் தடையின் போது மாணவர்களின் கல்வி தடைப்படும் வகையில் பல பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டது காகிதாதிகள, எழுதுகோல்கள், வெண்கட்டி, பாடசாலைப்பை, வெள்ளைத்துணி, விஞ்ஞான ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள் போன்றன தடைப் பொருட்களுக்குள் அடங்குவனவாகஇருக்கின்றன வெண்கட்டி எப்படி ஏ.கே. 47 ஆக மாறியது? எது எவ்வாறு

விசாலி

யினும் இவையெல்லாம் தமிழ் மாணவர்களுக்கு எதிராக அரசு திட்டமிட்டு செய்த சதியே என்பது தெளிவு.

குப்பி விளக்கோடு பங்கருக்குள் இருந்து எம்மாணவர்கள் கல்வி கற்றார்கள். உடுத்தஉடுப்போடு இடம் பெயர்ந்து வந்து அடிப்படை வசதி எதுவுமற்ற நிலையிலும் கல்வி கற்றார்கள். இதனைப் பொறுக்கமுடியாத அரசு பாடசாலைகளை இலக்கு வைத்து குண்டு வீச்சுக்களை நடாத்தியது. பாடசாலை ஆரம்பிக்கும், முடிவடையும் நேரங்களில் குண்டு வீச்சு நடாத்தியதன் மூலம் பல மாணவர்களையும், பச்சிளம் பாலகர்களையும் பலியெடுத்தது.

இதனைவிட பாடசாலை புனருத்தாரண வேலைகளை நிறுத்தியமை, இலவசப் புத்தகங்களை ஒழுங்காக அனுப்பாமை, தமிழ் பகுதிக்குரிய ஆசிரிய வெற்றிடங்களை நிரப்பாமை, வடபகுதியில் பரீட்சையை ஒழுங்காக நடத்தாமை. பரீட்சையின் போது குண்டுவீசுகின்றமை, உயர்கல்வி, வேலைவாய்ப்பு போன்ற விடயங்களில் தமிழ் மாணவர்களைத் திட்டமிட்டு ஒதுக்கியமை போன்ற அரசின் சாதனைப் பட்டியலை நீட்டிக்கொண்டே போகலாம்.

இது மட்டுமா? இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மாணவர்கள் பல இன்னல்களை அனுபவிக்கின்றனர். தடை முகாம்களுக்கு அழைத்துச்செல்லப்பட்டுசித்திரவதை செய்யப்படுகின்றனர். மாணவிகள் பலர் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர் வடபகுதியிலிருந்து பரீட்சைக்காக செல்பவர்களும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்படுகின்றனர் இவை நித்தம் தொடரும் கதையாகி விட்டது.

ஒரு இனத்தை முட்டாளாக்கி அடிமைப்படுத்த வேண்டுமாயின் முதலில் அவர்களை கல்வியறிவற்றவர்களாக்க வேண்டும். இந்தவகையில்தான் அரசு திட்டமிட்டுச் செயற்படுகிறது. அரசின் இத்திட்டம் தோல்வியடையும் என்பதையே அண்மைக்காலம் வரை வெளியான பெறுபேறுகள் காட்டுகின்றன. பல இன்னல்களுக்கும் இழப்புகளுக்கும் முகம் கொடுத்து ஆலமரம் போல் அசையாது நிற்பது தான் தமிழ் மாணவர்களின் தனித்துவம்.

அரசின் அட்டூழியங்களை இனம் கண்டும் காணுதவர்கள் போல் வாழுதல் கோழைத்தனம். 'மாணவர்கள் சக்தி மாபெரும் சக்தி' இதை சீனா போன்ற நாடுகளில் இடம் பெற்ற மாணவர் போராட்டங்கள் இனம் காட்டும். எமக்குரியவற்றை நாம்தான் தேட வேண்டும் அரசின் இச்செயல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் உணர்ச்சிபூர்வமாக மாணவர் எழுச்சி தினத்தைக் கொண்டாடுவதோடு எமது உரிமைக்காகவும் சுதந்திரத்துக்காகவும் போராட வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

ர-சி

# போர் அனர்த்தங்களின் மத்தியிலும் மாணவர்விடாமுயற்சி போற்றத்தக்கது

(யாழ்ப்பாணம்)

எமது பிரதேசத்தில் கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்றுவரும் போர் அனர்த்தங்கள் மத்தியில் எமது மாணாக்கர்கள் உறுதியும் விடா முயற்சியும் கொண்டு கல்வியைத் தொடர்ந்து தேர்வுகளிலும், பாடசாலைப் புறக்கருமங்களிலும் சாதனைகளை நிலைநாட்டி வருவது போற்றுதற்குரியதாகும் பாடசாலைகள் பல சிதைந்துபோயுள்ளன. இன்னும் பல இடம்பெயர்ந்துள்ளன. மாணவர்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்: பொருளாதாரத் தடைகளினால் சாதனங்களும், பௌதிக வளங்களும் குன்றியுள்ளன. ஆசிரிய ஆளணிப் பற்றாக்குறை பாரிய பிரச்சினையை உண்டாக்கியுள்ளது.

இவ்வாறு மாணவர் எழுச்சி நாளையொட்டி தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது, அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இந்த நிலையில் இங்குள்ள வளங்களின் உச்சப்பயன்பாட்டைப் பெற்றுத தனித்தும் ஒருமித்தும் கல்வியிற் கருத்தூன்றி நின்று பல சவால்களையும் எதிர்கொண்டு மாணவர்கள் கல்வித்துறையில் எழுச்சி பெற்று வருகின்றனர். எனினும் தமிழ்மொழி, கணிதம் ஆகிய பாடங்களில் மாணவர்களின் அடைவுநிலை திருப்தியாக இல்லை. இவற்றில் தமது முழுக்கவனத்தையும் செலுத்தி முன்னேற வேண்டியுள்ளது

செயல்முறைக்கல்வி, பரிகாரக்கற்றல், பின்தங்கிய மாணவர்களுக்கான ஊக்குவிப்பு, கட்புல செவிப்புலச் சாதனங்கள் மூலம் இயன்றளவு பாட அறிவைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்குதல்என்ற வகையில் கல்விதிணைக்களம், மாணவர் அமைப்பு, கல்விக்கழகம், தமிழ்வளர்ச்சிக்கழகம். தமிழீழ கல்விமேம்பாட்டுபேரவை என்பன ஈடுபட்டுள்ளன. இதற்கு மேலாகக் கல்விமான்கள் மற்றும் பொது நிறுவனங்களின் பங்கும் கல்விப் பணிக்கு உறுதுணையாகவுள்ளன.

எதிர்வரும் காலம் இன்னும் துன்பமான காலமாக மாறினாலும், மாணவர்கள் கல்வி அறிவைப் பெறுவதில் ஊக்கம் தளராது உற்சாகத்தோடு செயற்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

# சந்ததியின் நலன்பேண வாழ்த்துகின்றோம்

உருவாகி வருகின்ற தமிழீழத்தின்
எதிர்காலச் சிற்பிகளாம் மாணவர்கள்
கருவாகும் இந்நேரம் கருத்தூன்றிக்
கலைகளிலே நல்லறிவும் செயற்றிறனும்
குருவூடே ஐயமறக் கற்றுணர்ந்து
குலையாத ஒழுக்கம்நல் லடக்கமதை
திருவாகத் தேட்டமெனக் கைக்கெடுத்து
களங்கமற வாழ்ந்துயர வாழ்த்துகின்றோம்

வாழ்க்கையெனும் சாகரத்தில் நீந்துதற்கு
வளமான கல்விவளம மட்டுமன்றி
ஆள்வினையோ டெய்துகின்ற றொழிற்றகைமை
அனைவரையும் கவருகின்ற பண்பினோடு
தோள்வலியி னுடலுறுதி பெருக்கிக்கொண்டு
தொல்புவியி னியற்கைவள மாய்ந்துகண்டு
கேள்வியினிற் சிறந்துவளர்ந் தறிவுரைத்து
சந்ததியின் நலன்பேண வாழ்த்துகின்றோம்.

அடக்குகின்ற வினைதகர்க்கு மாற்றலுடன்
எழுந்துநிற்கு மீழத்தின் சுதந்திரத்தை
முடக்குகின்ற கயவர்களின் செயல்தகர்த்து
வீரமுடன் போராடும் திறன்வளர்த்து
அடிமைவிலங் குடைத்தெறியு மாண்மையோடு
அயராது பகைநோக்கி முன்னகர்ந்து
விடியலுக்குக் கைகொடுத்து விழைகின்ற
நன்னாட்டைப் படைத்திடவே
வாழ்த்துகின்றோம்.

''மாரீசன்''

# முன்னாள் ராணுவ அதிகாரிகள் 45 பேர் மீண்டும் சேவைக்கு அழைப்பு

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு யுத்தத்தை முன்னெடுக்கும் முகமாக ஓய்வு பெற்ற இராணுவ உத்தியோகத்தர்கள் 45 பேர் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கு -கிழக்கு யுத்தத்தை நடாத்துவதற்கு அனுபவம வாய்ந்தோர் போதியளவு இல்லாமல் இருப்பதனையடுத்து ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் இராணுவ ஆலோசகர்களாக செயல்பட ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கு மேஜர் ஜெனரல் பதவி உயர்வுகளையும் அரசு வழங்கவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நியமனங்கள் மூலம் வடக்கு கிழக்கில் புலிகளுக்கு எதிரான போரை பெருமெடுப்பில் நடாத்தலாமென அரசு திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

க-சி

# தினமும் 7 சிப்பாய்கள்; 'மே'யில் 221 ராணுவம் பலி

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் கடந்த மே மாதம் மேற்கொண்ட தாக்குதலில் நாள் ஒன்றிற்கு 7 படையினர் என்ற விகிதத்தில் படையினர் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. லெப். கேணல் ஒருவரும் விடுதலைப்புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

கடந்த மாதம் விடுதலைப் புலிகளின் உக்கிர தாக்குலுக்கு தரவைக்குளம், இராணுவமுகாம், காட்டுப் புளியங்குளம் பொலிஸ் -ராணுவகூட்டு முகாம்கள் தகர்க்கப்பட்டதும் தெரிந்ததே.

க-சி

# விளையாட்டுப் போட்டிகள் மனத்துணிவை ஏற்படுத்துகிறது

[மானிப்பாய்]

ஆரம்ப பாடசாலைகளின் செயற்பாடுகள் மாணவர் வாழ்க்கையில் கல்வியின் அத்திபாரமாக அமைகிறது. ஆரம்பக் கல்வியும் அதன் ஈடேற்றமும் விளையாட்டிலேயே தங்கியுள்ளது.

இவ்வாறு யாழ். வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் முதன்மை விருந்தினாகக் கலந்து கொண்டு உரையாற்றிய நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ. அருளானந்தம் கூறினார்.

வித்தியாலய அதிபர் க. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அருளானந்தம் தொடர்ந்து உரையாற்றுகையில்;

மனதில் தைரியத்தையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தி தனக்கிலையென எண்ணியிருந்த திறன்களை வெளிக்கொணர்ந்து வாழ்க்கையில் நம்பிக்கையையும் துணிவையும் ஏற்படுத்துவது விளையாட்டுப் போட்டியாகும் என்றார்.

இப்போட்டியில் ஆரூரர் இல்லம் முதலாமிடத்தையும், அப்பர் இல்லம் இரண்டாம் இடத்தையும், சம்பந்தர் இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றுக்கொண்டது; -71-இ

# விமான நிலைய வேவுபார்ப்பு ‘ராடர்’ முறை இந்தியாவில் அமுல்

[புதுடில்லி)

இந்தியாவின் அதி நவீன விமான நிலைய வேவுபார்ப்பு ராடர் வசதிமுறை நேற்று முன்தினம் கேரள தலைநகர் திருவனந்தபுரத்தில் இயக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்திய விமானநிலைய ஆணை அமைச்சினுல் சுமார் 30கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தமுறை விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு முறையை நவீனப்படுத்தும். இதன்மூலம் எல்லா கால நிலையிலும் நெடுந்தூரத்தில் இருந்தவாறே பறக்கும் விமானங்களை கண்டுபிடித்து அவற்றின் மார்க்கங்களை விமானப்போக்குவரத்து கட்டுப்பாட்டாளர் கண்டறிவதற்கு பெரிதும் உதவும்'

மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் திரு. குலாம்நபி ஆஸாத் இந் நிகழ்வில் உரையாற்றும் போது: இத்தகைய ராடர்கள் ஹைதராபாத். குவாகாத்தி, மற்றும் அகமதாபாத் விமான நிலையங்களிலும் பொருத்தப்படும் எனக் கூறினுர்.

இந்தியாவின் இந்த தயாரிப்பானது அதன் பாதுகாப்பிற்கும் போர்க்கால நடவடிக்கைகளுக்கும் பெரிதும் உதவுமெனவும் இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்: சி

## ‘சீ டான்சர்’ கப்பல் விபத்து

# காணுமல்போன!மாலுமியை கண்டுபிடிக்க தேடுதல்

[கொழும்பு]

காங்கேசன்துறை கடல் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ‘சீ-டான்சர்‘ கப்பல் கடற்கண்ணியுடன்மோதி தக்ர்ந்த வேளை காணுமல்போன கப்பலின் மாலுமி ஒருவரை இன்னமும் கண்டுபிடிக்க முடியாமவிருப்பதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

காணுமல்போயுள்ள இந்த இந்தோனேஷிய மாலுமியை கண்டுபிடிப்பதற்கான தேடுதல்தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதாகவும், சம்பவம் நடைபெற்றுநேற்று நண்பகல் வரையிலான 16 மணி நேர தேடுதல் பயனளிக்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்ோனேஷிய மாலுமிகளால் இயக்கப்படும் 800 தொன்நிறையுடைய சீ-டான்சர் என்னும் இக்கப்பல் கடந்த ஞாயிற்றுக்கிழமை காங்கேசன்துறையில் கடற்படையினரின் பரிசோதனையை முடித்துக்கொண்டு திருமலை நோக்கி புறப்பட்டுச் சென்றுகொண்டிருக்கையில் கடற்கண்ணியுடன் மோதியது.

இச்சம்பவத்தின்போது காயமடைந்த இரு இந்ோனேஷிய மாலுமிகளும் பலாலி இராணுவ வைத்திய சாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டுள்ளனர். கி

## செப்ரிசீமியாவினுல்

# இரு குழந்தைகள் மரணம்

(யாழ்ப்பாணம்)

செப்ரிசீமியா நோயினுல் பாதிக்கப்பட்ட மேலும் இரு குழந்தைகள் யாழ். போதனு வைத்தியசாலையில மரணமடைந்துள்ளன.

சரசாலை தெற்கைச்சேர்ந்த பிரபாகரன் மகிந்தன் (ஒரு வயது), பொலிகண்டியைச் சேர்ந்த அன்ரன் மரியராஜ் மேரி ரூபனு (எட்டு மாதட ) ஆகிய இரு குழந்தைகளுமே மரணமடைந்துள்ளன

(90,160-கி)

# கோழித்திருடன் கத்திகுத்து இரு பெண்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இரவுவேளை திருட்டுத் தனமாக கோழி பிடிக்கச் சென்ற இனந்தெரியாத நபர், வீட்டுக்காரர் விழித்துக்கொண்டதால் அவர்களைக் கத்தியால் குத்திவிட்டு தப்பித்துச் சென்றுள்ளார். இச்சம்பவத்தில் இரண்டு பெண்கள் படுகாயமடைந்தனர். ஏழாலை கிழக்கில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் கனகமலர் (58 வயது). புஸ்பராணி (39 வயது) ஆகிய இருவருமே கத்திக்குத்துக்கு இலக்காகி படுகாயமடைந்தவர்களாவர்.

சம்பவதினம் இரவு கோழிகளின் சத்தத்தைக்கேட்டு நித்திரையில் இருந்து விழித்தெழுந்து கோழிகளின் பக்கம் ஓடிச்சென்ற போதே கோழித்திருடன் இருட்டில் இருந்து இருவரையும் குத்திவிட்டு தலைமறைவாகினுன்.

காயமடைந்த இருவரும் யாழ். போதனு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர், 90-சி

# முத்திரை, வான்கடிதங்கள் ஓரளவு கையிருப்பில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தில் முத்திரைகள் மற்றும் வான் கடிதங்கள் ஓரளவு கையிருப்பில் இருப்பதாக யாழ் பிரதம தபாலதிபர் தெரிவித்தார்.

இம்முத்திரைகள், வான்கடிதங்களும் குறைந்தது இரண்டு வாரங்களுக்குமே போதுமானது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து தபால்கள் கப்பலில் வந்து சேராதையால் முத்திரைகளுக்கும் தட்டுப்பாடு நிலவும் அபாயம் தோன்றியுள்ளது. 170 சி

# கால்நடை வளர்ப்போரை ஊக்குவிக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

வட தமிழீழத்தில்கால்நடை உற்பத்தியை ஊக்குவிக்க பல்வேறு முயற்சி தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் எடுத்துவருகின்றது. இராணுவ நடவடிக்கைகளாலும். பொருளாதாரத்தடையினுலும் பாதிப்படைந்தவிலங்கு வேளாண்மைதுறையில்ஈடுபட்டிருக்கும் மக்களிடையே ஊக்குவிக்க பல்வேறு நடவடி எடுத்துவருகிறது,

உள்ளூர் தீவனங்களை உற்பத்தி செய்துகொடுத்தல்• நோய்தடுப்புச்சிகிச்சைகளை கிராமரீதியில் கிடைக்கச் செய்தல் போன்றவற்ருேடு கால் நடை வளர்ப்புக்கான பயிற்சிகளும் தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவன விலங்குவேளாண்மைப்பகுதி, கால் நடைசுகாதாரதிணைக்களத்துடன் இணைந்து செயற்படுத்தி வருகின்றது.

# வாழைகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

கடும் காற்றினால் யாழ்ப்பாண வாழைகள் பெரும் எண்ணிக்கையில் பாதிக்கப்பட்டுள்ளன வாழைக் குலைகளுடன் பெரும் எண்ணிக்கையான வாழைகள் முறிந்துள்ளன.

கடந்த ஏப்ரல் மாதஇறுதியில் காற்றுடன் பெய்த கடும் மழையினாலும் வாழைகளுக்கு பலத்தசேதம் ஏற்பட்டதுகுறிப்பிடத்தக்கது. 170-சி

## மாஸ்கோ பல்கலைக்கழக தீவிபத்து

# இறந்த இலங்கையர்தொகை இரண்டாக அதிகரிப்பு

(மாஸ்கோ)

மாஸ்கோவில் உள்ள பல்கலைக்கழகமொன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் கொல்லப்பட்ட இலங்கை மாணவர்களின் தொகை இரண்டாக அதிகரித்துள்ளது.

இறந்தவர்கள மாத்தறையைச் சேர்ந்த செல்வி ஹெரிச்சாபி எதிரிநாயக்க, மொறட்டுவையைச் சேர்ந்த செல்வி எசலா தேவிகா லொகுகமகே ஆகியோர் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் இரண்டாம் வருட மருத்துவ மாணவிகளாவர்.

இச் சம்பவத்தில் சட்டபீட மாணவர்களான இலங்கையைச் சேர்ந்த கனஜா ஜனக சஞ்சீவி பீரிஸ், அஜங்க சஞ்சயபீரிஸ், பியந்த பீரிஸ் ஆகிய மூவரும் படுகாயமடைந்துளளதாக அறிவிக்கப்படுகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாஸ்கோவிலுள்ள வெளிநாட்டு மாணவர் கல்வி கற்கும் பல்கலைக்கழகத்தின் விடுதியில் திடீரென தீப்பற்றிக்கொண்டதையடுத்தே இவ் அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

இறந்த இரு மாணவிகளினதும் சடலங்கள் விமான மூலம் கொழும்புக்கு எடுத்துவரப்படுகின்றன: -கி

## கடும்காற்றினுல்

# மீன்பிடித்தொழில் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

தற்பொது வீசும் கடும் காற்றினால் யாழ். குடா கடல் மீனவர்களின் மீனவதொழில் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது,

வள்ளங்களில் சென்று மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் கடும் காற்றுக்கு அஞ்சி மீன்பிடி தொழிலுக்கு கடலுக்கு செல்வதில்லை:

கடலுக்கு மீன்பிடிக்க சென்ற மீனவர்களின் வள்ளங்களின் இருந்த பாய்கள் என்பன காற்றினால் சேதமுற்றுள்ளன. இவற்றினால் தற்போது மீனின் விலை ஓரளவு அதிகரித்துள்ளது. 170-சி

# ‘சுகமஞ்சரி’

(பண்டத்தரிப்பு)

யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவ துறையினர் ஐக்கிய நாடுகளின் சிறுவர்நிதியத்தின் நிதியுதவியுடன்வெளியிட்டு வரும் ‘சுகமஞ்சரி’ என்னும் காலாண்டு சஞ்சிகையின் இரண்டாவது இதழ் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. -72

# டிசம்பர் முதல் வாரத்தில் ஐந்தாம் ஆண்டுப் பரீட்சை

(கொழும்பு)

இதுவரை காலமும் ஆகஸ்ட் மாதத்தில் நடாத்தப்பட்டு வந்த 5ம் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை இவ்வருடம் டிசம்பர் மாத முதல் வாரத்தில் க, பொ. த. (சா/தர) பரீட்சை ஆரம்பமாகும் தினத்துக்கு முதல்நாள் நடாத்தப்படவுள்ளது.

இதுபற்றிய சுற்று நிருபங்கள் பாடசாலை அதிபர்களுக்கு தற்பொழுது அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

புதிய முறையில் இவ்வினுப்பத்திரங்கள் தயாரிக்கப்படவுள்ளதனுல் பரீட்சைக்கு பரீட்சைத் திணைக்களமும், பாடசாலைகளும் ஆயத்தம் செய்வதற்கு போதியளவு கால அவகாசம் கொடுக்கும் பொருட்டே மேற்படி பரீட்சை டிசம்பருக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன- கி

# கடைகளை மூடுமாறு மலையகத்தில் பயமுறுத்தல்

(கண்டி)

திம்புலாகல தேரரின் இறுதிச் சடங்கு நடைபெற்ற கடந்த சனிக்கிழமை கடைகளை மூடி அவருக்கு அஞ்சலி செலுத்துமாறு கண்டி உட்பட மலையகத்தின் பல பகுதிகளிலும் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது-

இதனையடுத்து . கண்டியில் சகல தமிழ் கடைகளும் அச்சம் காரணமாக மூடப்பட்டன, மலையகத்தில் ஏனைய பகுதியிலும் அவ்வாருன பயமுறுத்தல்களால் கடைகள் மூடப்பட்டிருந்தன:

சில பகுதிகளில் வதந்திகளை பரப்பி இனக்கலவரத்தை தூண்ட பல முயற்சிகள் நடைபெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சி

# கோஸ்பைப் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து கப்பலில் தருவித்த வாட்டர் பம்புகளுக்குரிய கோஸ் பைட்புக்களை யாழ்' மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசம் விவசாயிகளுக்கு விநியோகித்து வருகின்றது. இந்த கோஸ் பைப்புகள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. -170

## கொள்ளுப்பிட்டியில்

# இனவிரோதசுவரொட்டிகள் ஒட்டிய நால்வர் கைது

(கொழும்பு)

கொழும்பு கொள்ளுப்பிட்டிப் பகுதியில், இன விரோதத்தைத் தூண்டும் விதத்தில் சுவரொட்டிகளை ஒட்டிய நான்கு சிங்களவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழருக்கு எதிராக வாசகங்கள் அடங்கிய இச்சுவரொட்டிகள் கொள்ளுப்பிட்டியின் சில பகுதிகளில் ஒட்டப்பட்டு வேறொரு பகுதியில் ஒட்டிக்கொண்டிருக்கும் போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தெற்கின் பல பகுதிகளில் இன விரோதத்தைத் தூண்டும் வகையில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. சி

## தமிழ்மக்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி

கள் குங்குமப் பொட்டு அணிவதையும் கைவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பபடுகிறது. இந்நிலை நீடித்தால் தமிழ் மக்கள் குறிப்பாக இளைஞர் யுவதிகள் பஸ் வண்டிகளில் வெளி இடங்களிற்கு சென்று தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாததொரு நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தமிழர்கள் தமது சொந்த இடங்களிலேயே அடிமைகளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கொழும்பு பத்திரிகை ஒன்றுகண்டனம் தெரிவித்துள்ளது. சி

# சைவசமயப் பரீட்சையில் 1787 மாணவர் சித்தி

[யாழ்ப்பாணம்]

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் இவ்வாண்டில் நடத்திய சைவசமய அறிவுப் பரீட்சையில் 1787 மாணவ மாணவிகள் சித்தியடைந்துள்ளார்கள்.

மேற்படி கழகத்தால் இவ்வருடத்தில் நடத்தப்பட்ட இப்பரீட்சைக்கு 2856 மாணவ மாணவிகள் விண்ணப்பம் செய்திருந்த போதிலும் 2400 மாணவ மாணவிகளே பரீட்சைக்குத் தோற்றியிருந்நார்கள்:

இப்பரீட்சை ஐந்து பரீட்சை நிலையங்களில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. 162-கி

## தெருக்கூத்து

[கொழும்புத்துறை]

கொழும்புத்துறை துறைமுகம் சந்தியில் போர்க்காலக் கருத்தரங்கு, வீதி ஓரத் தெருக்கூத்து ஆகியன அண்மையில் இடம்பெற்றன.

I54

# கடல் கண்ணியில் சிக்கிய 'சீ-டான்ஸர்' கடலில் மூழ்கியது

(கொழும்பு)
காங்கேசன்துறை துறை முகத்தில் கடல் கண்ணி வெடிக்கு இலக்காகிய ''சீ-டான்சர்'' கப்பல் கடலில் மூழ்கிக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது

துறைமுகத்திற்கு வெளியே நிறுத்தப்பட்டிருக்கும் இக் கப்பலினுள் நீர் புகுந்த வண்ணம் இருப்பதாகவும் இது எந்நேரமும் மூழ்கி விடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது,

இந்தக் கப்பல் இந்தோனேஷியா மாலுமிகளால் செலுத்திவரப்பட்டது.

ஒரு மாலுமி காணமல் போயும் மற்றுமிரு மாலுமிகள் காயத்துக்குள்ளாகியுமிருந்தனர்.

காணமல்போன இந்தோனேஷிய மாலுமியை நேற்று மாலைவரை தேடிய போதும் அவரை கண்டுபிடிக்க முடியவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது. எனினும் இலங்கை கடற்படையினர் தேடும் பணியை தொடர்ந்து நடாத்திவருகின்றனர். கே-இ

# தியாகி சிவகுமாரன் நினைவுதினம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)
தியாகி பொன் சிவகுமாரனின் 21 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று திங்சட்கிழமை மாலை 5-30 மணிக்கு உருப்பிராயில் உள்ள தியாகி பொன் சிவகுமாரனின் நினைவாலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

தமிழீழ தேசிய கொடியை யாழ். மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பார்த்திபன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து ஈகைச்சுடரை தமிழீழ மாவீர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றி வைக்க தியாகி பொன் சிவகுமாரனின் திருவுருவப்படத்திற்கு அவரது தாயார் மலர் மாலை அணிவித்தார். பின்னர் தியாகியின் உருவச் சிலைக்கு பொன் தியாகம் மலர் மாலை அணிவித்தார்,

இதனைத்தொடர்ந்துதியாகியின் உருவப்படத்திற்கு மக்கள் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்கள். பின்னர் பொதுக்கூட்டமும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.
170-இ

# மோதல் தவிர்ப்பைக் கடைப்பிடிக்க அரசு-புலிகளுக்கு கனடா வலியுறுத்து

[ஒட்டாவா]
அரசு படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் அதிகரித்து வருவதை நிறுத்தி மீண்டும் இரு பகுதியினரும் மோதல் தவிர்ப்புக்கு தயாராக வேண்டும் என்று கனடா இரு தரப்பினரையும் வலியுறுத்தியுள்ளது.

இருதரப்பினரும் மோதல் தவிர்ப்பை கடைப்பிடிப்பதற்கு தாம் உதவத்தயார் என கனடா கூறிவருவது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் கனேடிய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் றேமன் சாள்ஸ் இலங்கைவந்து திரும்பிய பின்னர் இந்த அறிவிப்பு விடப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. கே-இ

# நோயாளர் கப்பல் சேவை இடைநிறுத்தம்

## சர்வதேச செஞ்சிலுவை அறிவிப்பு

(கொழும்பு)
யாழ். குடாநாட்டிலிருந்து நோயாளர்களை கப்பல் மூலம் கொழும்பிற்கு கொண்டு செல்லும் தனது நடவடிக்கையை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

காங்கேசன்துறை கடற்பகுதியில் செஞ்சிலுவைச் சங்க கொடியுடன் வந்த 'சீ டான்சர்' கப்பல் கடல் கண்ணிவெடியில் சிக்கி தகர்க்கப்பட்டதை அடுத்தே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இந்த முடிவினை எடுத்துள்ளது. சி-இ

## இன்று மாணவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தாம் வாழும் சூழலை, தம் பள்ளியை, தாம் கற்கும் கல்வியை எண்ணத் தராசிலிட்டு நிறுத்திப் பார்க்க வேண்டும். அப்போதுதான் எவை எவை சரியென்பதும், எவ்வெவற்றிலிருந்து நாம் விடுபடவேண்டும் என்பதும், எதையெதைக் கைக்கொள்ள வேண்டும் என்பது தெள்ளென விளங்கும்.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

கல்வியிலே ஆர்வம் காட்டிய மாணவரின் கழுத்தைத் திருகுவதுபோல சிறிலங்கா அரசால் கொண்டுவரப்பட்டதே ''தரப்படுத்தல்'' சட்டமாகும். இந்த வேளையிலேதான் எமது மாணவர்கள் ஓரளவு விழிப்படைந்தார்கள். அரசிற்கு எதிராக அணி திரளத் தொடங்கினர்கள். புரட்சி மூலமே எம்மை நிறுவமுடியும் எனப் போராடப் புறப்பட்டார்கள்.

அன்றையஅரசியல்வாதிகள் பலரால் நஞ்சு ஊட்டப்பட்டு நலிவடைந்து போயிருந்த தமிழீழத் தேசிய உணர்வு, இளைஞர் குருதியால் வீறு கொள்ளலாயிற்று மாணவர் போர்க் குரலால் மகிழ்வு கொள்ளலாயிற்று. சிவகுமாரன் என்ற மாணவ வீரன், அடக்குமுறைக்கு எதிராகத் தன்னை ஆகுதியாக்கினன், சுதந்திர வேள்வித் தீ பலரையும் சுட்டது.

மற்றொரு புறத்தில், 1958 இல் இனக்கலவரத்தாற் பாதிக்கப்பட்ட தமிழர் சிலரைப் பள்ளிச் சிறுவனாக இருந்த போதே பார்த்துத் துடித்தது ஓர் உள்ளம். நிராயுத பாணிகளான அப்பாவித் தமிழர்களுக்கு எதிராக ஆயுத வலிமையைப் பிரயோகிக்கும் இந்த அமைப்பினை ஆயுதப் போராட்டத்தின் மூலமே எதிர்கொள்ள முடியும் என்று முடிவும் செய்தது அந்த உள்ளம். அந்த உள்ளம் தான் இன்றைய எங்கள் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் தமிழ் உள்ளமாகும்.

மாணவனாக இருந்தபோது மலினப்படுத்தும்போது கேளிக்கைக் கதைகளை மனதிற் பதிக்காமல் உரமூட்டும் வீரக்கதைகளை விடுதலைக் கதைகளை விரும்பி அவர் கற்றதாலும் தான் இன்று தமிழீழத் தேசிய ஆன்மா வலுவ்வாடு நிற்கிறது.

தேசியத் தலைவரினல் வலுவூட்டப்பட்டு மாவீரர்களினல் திடமூட்டப்பட்டு நிற்கும் தமிழீழத் தேசியத்திற்கு மேலும் உரமூட்ட வேண்டியது இன்றைய தமிழர்களின் கடமையாகும். அதிலும் நாட்டின் முதுகெலும்பாகக் கருதப்படும் இள வயதினர் பெரும்பாலும் மாணவர்களாகவே இருப்பதால் கடப்பாட்டில் பெரும் பங்கு மாணவர்களுக்கே உரியதாகிறது ஆகவே மாணவர் தங்கள் பொறுப்புக்களை முழுமையாக உணர்ந்து, மற்றவர்கக்கும் உணர்த்தும் நாளாக மாணவர் எழுச்சி நாளை ஆக்கிக் கொள்ள வேண்டும்.

வீணனவற்றையெல்லாம் விட்டுவிட்டு, வீரமும் ஈகமும்-சீலமும்-முயற்சியும நிறைந்த வாழ்விற்காகக் கல்வி கற்று ஒன்றுபட்டு ஒரு கொடியின் கீழ் எழுச்சி கொள்ளும் நாளாக மாணவர் எழுச்சி நாளை மனதிற் கொள்வோம்.

'எமது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக ஒரு புதிய இளம்பரம்பரை தோற்றம் கொள்ள வேண்டும். ஆற்றல் மிகுந்தவர்களாக அறிவு ஜீவிகளாக, தேசப்பற்றுளர்களாக, போர்க்கலை வலலுநர்களாக, நேர்மையும் கண்ணியமும் மிக்கவர்களாக ஒரு புதிய புரட்சிகரமான பரம்பரை தோன்ற வேண்டும். இந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக, நிர்வாகிகளாக ஆட்சியாளர்களாக உருப்பெற வேண்டும்' என்ற தேசியத்தலைவரின் கனவை நனவாக்கும் பெரும்பொறுப்பும் மாணவரிடமே உள்ளது என்பதையும் மாணவர் எழுச்சி நாளில் உளமிருத்தி உழைப்போம்.

## வடபகுதிக்கான

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கடந்த சனிக்கிழமை செஞ்சிலுவைச் சங்கக் கொடியுடன காங்கேசன்துறை சென்ற 'சீ-டான்ஸர்' என்ற கப்பல கண்ணிவெடி விபத்தில் சிக்கியதையடுத்துத் தமது சேவைகளை வடபகுதியில் முற்ருக நிறுத்திவிட ஆலோசிப்பதாக ஜெனீவா தலைமைச் செயலகப் பணிப்பாளர் அறிக்கை விடுத்திருப்பதாக 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா மேலும் தெரிவித்தது. தீ இ

## மாணவர் எழுச்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
நாளை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மும்மரமாக யாழ். நகரில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் ஜூன் 6 என பொறிக்கப்பட்டு அலங்கார வீதிவளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனைவிட பதாகைகளும் வீதிகளில் கட்டப்பட்டுள்ளன. பெரிய அளவிலான சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளன.

இன்று நடைபெறும் எழுச்சி நாளில் பிரமாண்டமான பேரணி நகரில் இடம்பெறும். இதில் மாணவர் எழுச்சி நாளை சித்தரிக்கும் அலங்கார ஊர்திகளும் எடுத்து செல்லப்படும். 2170

## இனவாதக் குண்டர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸார் அறிவித்துள்ளனர்.

காலியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இன வன்முறை, அந்தப் பகுதியின் ஏனைய பகுதிகளுக்கும் இப்போது பரவும் ஆபத்து ஏற்பட்டு வருவதையே இத் தாக்குதல் சம்பவம் காட்டுகிறது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற வன்முறைச்சம்பவத்தில் தமிழருக்குச் சொந்தமான 22 கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன, இதனையடுத்து அரசாங்கம் உடனே அங்கு ஊரடங்கு உத்தரவை அமுல்படுத்தியது, ஆனல் ஞாயிற்றுக்கிழமை ஊரடங்கு தளர்த்தப்பட்ட

...டங்கு தளர்த்தப்பட்ட பின் நேற்று இச்சம்பவம் நடந்தது.

காலியில் இப்போது கடற்படையினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. -இ

## நிவாரணப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
கடந்த சனிக்கிழமை செஞ்சிலுவைக் கொடியுடன் வந்த 'சி டான்சர்' என்ற கப்பல் காங்கேசன்துறை கடற்பகுதியில் கடற்கண்ணி ஒன்றில் சிக்கி தகர்க்கப்பட்டதைடுத்தே வடபகுதிக்கான நிவாரணப்பணிகளையும் கப்பல் சேவையையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இடைநிறுத்தியதாகவும் தெரிவிக்கப்பப்பட்டது.

வடபகுதிக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் செல்லும் இது போன்ற நிவாரணப் பணிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இடைநிறுததிவிட்டது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தள இணைப்பதிகாரி டொமினிக் ஹென்றி ஏ. எவ். பி. செய்தி ஸ்தாபனத்துக்கு தகவல் தெரிவிக்கையில் கூறியதாவது:

இப்போதைக்கு வடபகுதிக்கான நிவாரணம் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன அடுத்த சில தினங்ளுக்குள் ஜெனீவாவிலுள்ள செஞ்சிலுவை சஙகத்தின் தலைமைச் செயலகத்துடன் இது குறித்து ஆராய்ந்து ஒரு முடிவை எடுக்கவுள்ளோம் என்ருர்:

இதேவேளையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தூதுக் குளுவின் பிரதித் தலைவர் போல்ப் ரூஸ் தகவல் தருகையில்: தற்போதைக்கு வடபகுதியின் நிவாரணப் பணிகளை நிறுத்துவது பற்றி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சம்பந்தப்பட்ட அனைவருடனும் தொடர்புகொண்டு இப்போதுள்ள நிலைமைகளை மீளாய்வு செய்யவேண்டும் எனவும். இது போன்ற நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளைபலப்படுத்திக் கொள்ளவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். இ

## உணவுப் பொருள்களை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
னதையடுத்து வடபகுதிக்கான உணவு சேவை எந்த விதத்திலும் பாதிக்கப்படாது எனவும் அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடபகுதிக்கு உணவுப் பொருள்களை அனுப்ப வேண்டாம் என அரசிடமிருந்து எமக்கு எதுவித தடை உத்தரவும் வரவில்லை யெனவும் அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். இ

## தந்திரிமலை

[1ம் பக்கத்தொடர்ச்சி]
★ நடுத்தரகாஸ்ரவைகள் -25
★ 9மி.மீ ரவைகள் -31,
★ ஏகே ரவை கூடுகள்- -30
★ கிளைமோர் வெடிக்க வைக்கும் கருவிகள் - 3
★ கைக்குண்டுகள்- 8
★ ஏகே ரவை கூடு தாங்கி அணிகள் - 6
★ பைகள் -13'
★ வயர் ரோல் - 1
★ தண்ணீர் கொள்கலன்கள் - 13
★ சாப்பாட்டு பெட்டிகள் - 7
★ தொலைக் காட்சி பெட்டி - 1
★ இராணுவ இடுப்பு பட்டிகள் - 20
★ இராணுவ தலைக்கவசங்கள் - 16
★ இராணுவ சீருடைகள் - 47
★ பச்சை நிற சேட்கள்- 35
★ கிளைமோர் தாங்கி அணி-1
★ மழைக்கவசங்கள் - 12
★ உருமறைப்பு சேட்கள்- 10
★ உருமறைப்பு காற்சட்டைகள் - 9
★ அரைக்காற் சட்டைகள் - 14
★ உருமறைப்பு ரீ சேட்கள் -7
★ கஜெறற்கள் - 9
★ இராணுவ சப்பாத்துக்கள்-39 சோடி
★ கன்வஸ் சப்பாத்துக்கள்- 11 சோடி
★ சாதாரணதொப்பிகள்-13
★ மின் அழுத்தி - 1
★ 60 அம்பியர் மின்கலம் - 1
★ 90 அம்பியர் மின்கலம் -1
★ வானெலி ஒலிப்பதிவு நாடாக்கருவிகள் - 2
★ பணம் ரூபா - 958

என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டஇராணுவதளபாடங்களாகும் என அறிவிக்கப்பட்டது. கே. இ

பகைவன் முகாமுக்குள் முகமூடி
தெருவில் ஒழுங்கையில் உபதேசி
வேடத்தில் வல்லவன் உளவாளி
வெளிச்சத்தில் நன்ருக அவதானி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ... யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூன் மாதம் 06-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the Gene... J
Sri Lanka under Licence number B/1683...